மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : தலைவரவர்களே, மீஞ்சூரில் இப்பொழுது ஈ.எஸ்.ஐ. மருந்தகம் அமைக்கப்பட்டிருக்கிறது. ரெட்ஹில்ஸிலும் அமைப்பதற்கு அரசு யோசித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 26, 27 ஆகிய இரண்டு வினாக்களும் ஒன்றாகச் சேர்த்து எடுத்துக்கொள்ளப்படுகின்றன.

வானொலி நிகழ்ச்சிகள்.

*26 வினா—திரு. கே. ஏ. வகாப் : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

தமிழகத்தில் உள்ள வானொலி நிலையங்களில், இஸ்லாமிய, கிறிஸ்தவ நிகழ்ச்சிகளுக்கு இன்னும் அதிக சந்தர்ப்பமும், நேரமும் அளிக்க அரசு ஆவன செய்யும் உத்தேசம் உள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இல்லை.

*27 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா :

வானொலியில் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்ய தனி நேரம் ஒதுக்க மாநில அரசு மத்திய அரசிடம் கோரியுள்ளதா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இல்லை.

திரு. துரைமுருகன் : தலைவரவர்களே, மதப் பிரச்சாரத்தால் ஜாதிகள் வளர்கின்றன என்பது உண்மையா? அம்மாதிரி மதப் பிரச்சாரத்தைத் தடை செய்ய உத்தேசமுண்டா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இது வானொலி சம்பந்தமான பிரச்னை. ஆகவே, சர்க்காரும் மதப்பிரச்சாரமும் என்கின்ற இணைப்பில் இது வராது.

திரு. என். கிட்டப்பா : தலைவரவர்களே, சமயப் பிரச்சாரங்கள் செய்ய அனுமதிக்கப்படும் வானொலியில் எல்லாக் கருத்துக்களுக்கும் சம வாய்ப்பளிக்கின்ற அடிப்படையில் வானொலியில் பகுத்தறிவுப் பிரச்சாரத்தை அனுமதிக்க வேண்டி மாநில அரசு மத்திய அரசிடம் கூறுமா?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : திரு. கிட்டப்பா அவர்களுடைய முதல் கேள்வி, 'வானொலியில் பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்ய தனி நேரம் ஒதுக்க மாநில அரசு மத்திய அரசிடம் கோரியுள்ளதா?' என்பதாகும். இப்பொழுது அவர் கேட்டிருக்கின்ற துணைக் கேள்வியும் அதைச் சார்ந்ததாகவே இருக்கும் என்ற கருத்தில் நான் பதில் அளிக்கிறேன். வானொலியிலே பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்வது என்பது, மற்ற மதப் பிரசாரங்களுக்கு எதிரிடையான பிரச்சாரமாக இருக்கக் கூடாது. அப்படி